අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/12/01/01/பொது
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2023.03.28

சகல கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்,
சகல தேசிய பாடசாலை அதிபர்கள்,
ஆசிரிய கலாசாலை அதிபர்கள்,

**<u>தேர்தல் காலத்தில் கல்விசாரா பணிக்குழுவினரின் இடமாற்றங்கள்</u>**

தேர்தல் ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் EC/SO/LAE/2023/4C(II) மற்றும் 2023.03.13 ஆம் திகதிய கடிதம் தொடர்பானதாகும்.

02. உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்த காலகட்டத்தில், வருடாந்த அல்லாத இடமாற்றங்கள் மற்றும் இணைப்புகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலை பெறவேண்டும்.

03. அவ்வாறு ஒப்புதலை பெற்றுக்கொள்ளும்போது உரிய அலுவலர்களின் கோரிக்கைகள் நேரடியாகவே தேர்தல் ஆணைக்குழுவிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அக்கோரிக்கைகள் தனிப்பட்ட ரீதியில் அந்தந்த பதவியாளர்களால் சமர்ப்பிப்பதைத் தவிர, கல்வி அமைச்சின் மூலமாக எவ்வித பரிந்துரையோ அல்லது குறைந்தபட்சம் ஒரு கடிதத்தையேனும் முன்னிலைப்படுத்தாமை கவலைக்கிடமான விடயமாகும் என உரிய கடிதத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார்.

04..அதன் பிரகாரம் இடமாற்றங்கள் அல்லது இணைப்புகள் தொடர்பாக கோரிக்கைகளை முன்வைக்கும்போது உரிய அலுவலரின் தனிப்பட்ட மேன்முறையீடுடன் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக தகவல்களை பூர்த்தி செய்து, தாபனத் தலைவரின் எனக்கு முன்னிலைப்படுத்துமாறு அனைத்து கல்விசாரா பணிக்குழுவினரை அறிவுறுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம் ஆர்.பீ. கங்கேவல
மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவை))
கல்விச் செயலாளருக்காக

பிரதி: செயலாளர், தேர்தல் ஆணைக்குழு - த.அ.கொ.



Scanned with MOBILE SCANNER